# குதம்பை சித்தர் பாடல்களில் சமுதாய சிந்தனை

28

**முனைவர் இரா.சித்ரா**

**விரிவுரையாளர், பாரதியார் மகளிர் கலை&அறிவியல் கல்லூரி**

**தேவியாக்குறிச்சி**

**ஆய்வுச் சுருக்கம் .**

குதம்பைச் சித்தரின்கொள்கை, அவர் கூறும் நல்வழிகள் ஆகியவற்றை இக்கட்டுரையில் காணலாம். தமிழர்களின் வாழ்க்கையை அறிந்து கொள்ள இலக்கியங்கள் காலந்தோறும் மாறுபட்டு வந்த நிலையில் மக்களோடு இலக்கியங்கள் ஒன்றி நிற்பதையும், சங்க நூல்கள், காப்பியங்கள், அற, பக்தி இலக்கியங்களுக்குப் பின்பு மக்களின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட அக்காலக்கட்டத்தில் மக்களை நல்வாழிப்படுத்தியவர்கள் சித்தர்களும் அவர்களது பாடல்களுமே ஆகும்.

**திறவுச்சொற்கள்**

**ஐம்புலன் - புரட்சி - ஞானம் – பற்று -** தானம்

**முன்னுரை**:

சித்தத்தைசிவன் பால் வைத்தவர்கள் என்றும் சித்தத்தை வென்றவர்கள் என்றும் சுட்டப்பெறும் சித்தர்கள் பல்வேறு காலகட்டங்களில் தமிழகத்தில் தோன்றி அரிய சித்து வேலைகளையும் மருத்துவ வேலைகளையும் செய்து வந்துள்ளனர் இவர்கள் புறப்பினி நீக்க மருந்துகளும் அகப்பினி நீக்க பாடல்களும் தந்து தமிழுக்கு அரிய தொண்டுகள் செய்துள்ளனர்

மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறவன் (தொல்.நற்றிணையியல்)

என்று நாச்சினார்க்கினியர் காமம், வெகுளி, மயக்கம் இல்லாத ஒழுகலாற்றினை இறப்பு, நிகழ்வு,எதிர்ப்வு என்ற மூவகை காலத்தையும் அகத்தியர் முதலானோர் அறிவர் என்று விளக்குகிறார்.

“போகச் சமாதி உகந்தவர் சித்தர்
சித்தர் சிவத்தை வென்றவர்”

என்றும் திருமூலர் தமது திருமந்திரத்தில் கூறியுள்ளார்.

“சிந்தை தெரிந்திருப்பவன் ஆர்
அவனேச் சித்தன்”

என்று வான்மீகிச்சித்தரும்

“எழும்பாமல் வாசனையைக் கொன்றோன் ஞானி

ஏகாமல் வாசனையை அடித்தோன் சித்தன்”
என்று சட்டை முனியும் பாடுகிறார்.

மூச்சினை அடக்கி யோக ஆற்றலினால் உடலில் உள்ள மூலாதாரம், தொப்புழ், இதயம், இரைப்பையின் நடு கழுத்து, தலை ஆகிய 6 இடங்களிலும் மனதை முறையாக நாட்டிக் குண்டலினியை எழுப்பிப் பற்பலஅனுபவமூம் வெற்றியும் கண்டு சித்தி பெறுபவர்களே சித்தர் என்று வழக்கமும் பரவியுள்ளது என்கிறார் தெ.போ. மீனாட்சி சுந்தரனார்.

ஆகமமாகிய இந்த மனித உடம்பில் தெய்வ பக்தி கொண்டு மக்களிடையே வானவர்களாகவும், மனித தெய்வங்களாகவும் வாழ்ந்து அருளை வழங்கி வந்த பெரியோர்களே மகான்கள் அவர்களே சித்தர்கள் என்று கூறுகின்றார் மீ.ப. சோமசுந்தரனார்.

**சித்தர்களின் எண்ணிக்கை**

நவமிரண்டு சித்தர்கள் என்று 18 சித்தர்களைக் கூறினாலும் அவர்கள் எண்ணிக்கையில் அடங்காதவர்கள் சித்தர் இலக்கியம் என்னும் தம் நூலில் ஔவையார், மாணிக்கவாசகர், காரைக்காலம்மையார் பட்டினத்தார், பதிரகிரியார் ஆகியோரையும் சேர்த்து சித்தர்களாக தந்துள்ளார் மீ.ப. சோமு எண்ணி சுட்ட முடியாத நிலையில் பரந்துள்ள இத்தகு சித்தர்களை எண்ணி

“எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தாரய்யா யானும் வந்தேன் ஒரு சித்தனாக இந்த நாட்டில்’’
என்று பாரதியாரும் இந்த மரபையொட்டி பாடல்கள் பாடியுள்ளார்.

**சித்தர்களின் உள்ளமும் உருவமும்**

சித்தர்கள் இல்லற நெறியிலும் துறவற நெறியிலும் வழுவாது அன்றாட கடமைகளை செய்து வாழ்ந்துள்ளனர். அத்தகைய சித்தர்களின் உறவுகளையும் உள்ளப் பண்புகளையும் சித்தர் பாடல்கள் கூறுகின்றன. உடை கோவணமும் உறங்க புறந்தின்னையும் பருகத் தண்ணீரும் கிடைத்தால் போதும் என்று உலாவுகிற சித்தர்கள் அநேகர்.
சித்தர்கள் எளிய மக்கள் போல

“வேர்த்தால் குளித்துப் பசித்தால் புசித்து விழி துயின்றி
பார்த்தால் உலகத்தார் போல் இருப்பர் பற்றாரே”

என்று சித்தர்களை அடையாளம் காட்டுகிறார் பட்டினத்தார்.

புறம் எத்தன்மையாயினும் அவர்களது சித்தம் கலங்கமற்று இருப்பர் எப்போதும் தெளிவு கொண்டிருக்கும்.

“சிந்தையிலே கலங்கமற்றவன் சித்தன் ஆவான்” (அகத்தியர் நூறு-50)

“சிந்தை தெளிந்து இருப்பவன் ஆர் அவனே சித்தன்”

(வான்மீகி சூத்திர

ஞானம் -2)

என்னும் நூலிலும், சித்தம் என்பதற்கு அறிவு என்னும் பொருள் உண்டு ஆகவே சித்தர்கள் என்றால் அறிவு படைத்தவர்கள், அறிஞர்கள், மேதைகள், பேரறிவுபடைத்தவர்கள், நுண்ணறிவாளர், விஞ்ஞானிகள், மெய்ஞானிகள் என்று பொருள் கொள்வதே பொருத்தமாகும் என்கிறார் சாமி. சிதம்பரனார்.

**சித்தர்களின் செயல்பாடு**

உருவும், உள்ளமும் போலவே சித்தர்களின் பணிகளும் மிகவும் எளியவை எளிய மக்களைப் போன்று பானை வனைந்தும் நெசவு நெய்தும் ஆடுமாடுகள் மேய்த்தும் பாம்பாட்டும் தொழில் புரிந்தும் வாழ்க்கை நடத்தியவர்கள் இயற்கையின் நுட்பங்கள் சேர்ந்து உலக நலனுக்கு பயன்படும் வண்ணம் மருத்துவ மந்திர தந்திர பணிகளும் புரிந்தவர்கள் யோகா உடற்பயிற்சி சுவாசபயிற்சி போன்ற மருத்துவ பயிற்சிகளும் வழங்கியவர்கள் இல்லறத்தில் இருந்த பதிலும் துறவுக்குரிய ஒழுக்க நெறிகளோடு வாழ்ந்தவர்கள்.

**சித்தர்களின் உபதேசங்கள்**

உள்ளத்தில் உள்ளதை உணர்த்த அவர்களது வாழ்க்கையைப் போலவே மிகவும் எளியவை எளியதொடர்கள் மக்களிடையே புழங்கி வரும் உவமைகள் பழமொழிகள் முதலியவற்றை கொண்டு நாட்டுப்புறப்பாடல்களாகவும் அவர்கள் புரிந்து வரும் கைத்தொழில்களின் மூலம் குறியீட்டுத் தொனியில் உணர்த்தியவர்கள்.

“நாதர் முடி மேலிருக்கும் நல்ல பாம்பே

நச்சுப்பையை வைத்திருக்கும் நல்ல பாம்பே”

(பாம்பாட்டிச் சித்தர் பாடல் -20)

என்று பாம்பை வைத்து ஆட்டிக்கொண்டே உலகியல் ஞானம் பேசிய பாம்பாட்டிச் சித்தர் போல் மாடு மேய்க்கும் இடைக்காடர் மயிலோடும் குயிலோடும் அன்னத்தோடும் பேசுவது போல சித்தர் நெறி பேசுகிறார் இடைக்காடர்.

“ஆட்டுக் கூட்டங்களை அண்டும் புலிகளை

ஓட்டியே ஊதுகுழல் -கோனே”

(இடைக்காட்டு சித்தர் பாடல் –101)

என்று சகமேய்ப்பனிடத்தில் கூறுவது போல் கூறுகிறார்.

இன்றைய உலகமயமாக்கலில் மந்தைக் கூட்டமாக மக்கள் மாறிவரும் போக்கை கடுவெளிச் சித்தர் பாடல் மூலம் காணலாம்.

“நந்தவனத்தில் ஒரு ஆண்டி -அவன்

நாலூறு மாதமாய்க் குயவனை வேண்டி”.

(கடுவெளிச் சித்தர் ஆனந்த களிப்பு -47)

ஜெயகாந்தனின் ‘நந்தவனத்தில் ஒர் ஆண்டி’ என்னும் சிறுகதையில் இப்பாடல் இடம்

பெற்றுள்ளதைக் காணலாம். உடல்அழகே உறுதி என்று

"ஊத்தைச் சடலமடி உப்பிருந்த பாண்டமடி"

(அழுங்கனிச் சித்தர் பாடல் -6)

என்று கூறுவதைக் காணலாம், ஊத்தைச் சடலம் என்று ஒதுக்கிய அழுங்கணிச் சித்தர் பார்வையில் மாறுபட்டு கொங்கணச் சித்தர் குரல் எழுப்புகிறார்.

"ஊத்தைச் சடலம் என்று எண்ணாதே

உட்பிட்ட பாண்டம் என்று எண்ணாதே"

என உடலின் தன்மையைக்கூறுகிறார்.

**சித்தர்கள் செய்த புரட்சி**

சாதி,சமயப் பேதங்களைமூடச் சாத்திர சடங்குசளை சித்தர்கள் சாடும் முறை மக்கள் மத்தியில் அவர்கள் பாடல்கள்நின்ற பாங்கு அதனைப் புரட்சிக் குரலில் காட்டுகின்றன. சித்தர்கள் நடமாடும் கூடங்களாக இருந்ததோடு பரந்துபட்ட நோக்கில் ஆழமான தத்துவப் பொருளோடு அடிப்படையான எளிய நெறிகளையும் மக்கள் பேசும் பாட்டாக வடித்தனர். ஆகையால் எளிய மக்களின் நீதிபோதனைக் கூடங்களாக உலவியவர்கள் சித்தர்கள் அவர்கள் நெறியை பின்பற்றி மக்கள் சிந்தைத் தெளிவுள்ளவர்களாய், நல்வழிப் பாதையில் இயங்கி இருந்தனர் என்பதை அறியலாம்.

**குதம்பைச் சித்தரின் வாழ்க்கை வரலாறு**

இவர் இடையர் குலத்தைச்சார்ந்தவர் என்றும், மயிலாடுதுறையில் சமாதியானவர் என்றும் கூறுவர். பாடல் தோறும் ‘குதம்பாய்' என்ற சொல் வருவதால் குதம்பைச் சித்தர் எனப்பட்டார்.‘குதம்பை’ என்பது பெண்சிறுமியர் அணியும் ஒரு காதணி ஆகும். இவர் காட்டிற்குள் சென்று தவம் செய்து பல பாடல்களைப் பாடியுள்ளார். இவர் பாடியது கடவுள் வாழ்த்து நீங்கலாக 229 கண்ணிகள் ஆகும்.

**கடவுளைக் கானும் நெறி**

பூரணத்தைக் கண்டு வாழ்பவர்க்கு சாவு இல்லை என்றும், வஸ்துவான கடவுளைக் கண்டவர்க்கு துன்பம் இல்லை என்றும், கூறுகிறார். இதனையே வள்ளுவர் "உறங்குவது போலும் சாக்காடு என்கிறார்" ஆவிக்குத் துணையாக இருக்கும் கடவுளை வழிபடுங்கள் என்கிறார். படையல் பொருட்களை விட 'நல்ல மனமே' கடவுளுக்கு உண்மையான காணிக்கைஎன்கிறார்.

**கடவுளின் இயல்பு**

தேவர்களும் சித்தர்களும் தேடியலையும் மூல முதற்பொருள் கடவுள் என்றும் உள்ளவன் அவனே சத், சித், வித்து, வத்து என்றும் கூறுகிறார்.அக்கடவுள் உருவமாகவும், அருவமாகவும் எல்லாச் செல்வமாகவும், பஞ்சபூதங்களை உண்டாக்கியவன் என்றும், ஆதியும் அந்தமும் ஆகிய

கடவுள் ஒருவனே சோதி வடிவில் நிற்பவன்என்றும் புத்தி, சித்தம் ஆகியவற்றை ஒரே உடம்பில் தந்த தேவன் என்கிறார். ஆத்துமா உருவமில்லாமல் உணரத்தக்கதாய் உள்ளது போல் கடவுளும்உருவமற்றவனாய் உணரத்தக்கவனாய் உள்ளான் என்கிறார்.

"நித்திய வத்துவை நீங்காது நாடினால்
முத்திதான் தித்திக்குமே குதம்பாய்
முத்திதான் தித்திக்குமே "

என்று அழியாது இருக்கும் பொருளை (வத்துவை) மனத்தால் நீங்காது சிந்தித்தால் முத்திதான் சித்தியாகும் என்று கூறுகிறார்.

**உடலின் இழிவு**

திரும்பத்திரும்ப நாற்றம் எடுக்கும் இந்த உடலுக்கு வாசனை பொருள், மஞ்சள்பூச்சு, சேலை, தங்கநகை, பூவின்வாசம், நீராடிக்குளித்தல், இவைகள் எதற்கு.

"காகம் கழுகு களித்துண்ணும் மேனிக்கு
வாகனம் ஏதுக்கடி குதம்பாய்
வாகனம் ஏதுக்கடி"

காகம்,கழுகும் ஆகியவை உண்ணப்போகும் உடலுக்கு வாகனம் எதற்கு? நம் உயிர் நீங்கியப் பிறகு கோவணத்தோடு கொளுத்தப்போகும் இந்த உடலுக்கு பஞ்சனைகள் எதற்கு? என்று உடலின் இழிந்த நிலையைக் கூறுகிறார்.

**பரத்தையர் தன்மை**

இந்த உடல் தளர்வு வந்து சாவு வரும்போது பேசும் மொழிகுளரும், வயதுமுதிரும்போது உடல் தளர்வு ஏற்படும். கண்கள் ஒளி இழக்கும், கருத்த கூந்தல் பஞ்சு போல் வெளுத்து உதிரும், கன்னங்கள் குழிவிழுந்து ஒட்டிப்போகும், நிமிர்ந்த உடல் கூன் விழும் கால் வலிமை இழக்கும். பிறக்கும் போது இருக்கும் இயலாமை இறக்கும்போது தானே வந்துவிடும். என பரத்தையரை எச்சரிக்கைச் செய்கிறார் குதம்பை.

**குண மாறுபாடுகள்**:

கோபம், பொறாமை, கொடியசொல், கோள்மூட்டல்ஆகியவை பாவத்துக்கு காரணமாகும்.கள்ள மனம், குடி, காமம், கொலை கபடம் ஆகியவை ஒருவரை பள்ளத்தில் தள்ளும் என்கிறார்.பொருளாசை மிக்கோர்க்கு நரகமே கிடைக்கும் உத்தமர்களை இகழ்வது. பிரமத்தை வழிபாடு செய்யாதவர்க்கு, கடவுளை நினையாதவர்க்கு பூசைகள் செய்யும் அறிவிளார்க்கு கடவுள் மேல் அன்பு, பக்தி கொள்ளாதவர்க்கு என்று பலகுணங்களைக் கொண்டவர்க்கு நரகத் துன்பம் கிடைப்பது உறுதி என்கிறார்.

**பொய்யான தவ ஒழுக்கம்** :

போலித் துறவிகளுக்கும், வஞ்சகம் செய்பவர்க்கும், பெண்ணாசைக் கொள்பவர்க்கும்,

தேவனை உள்ளத்தில் வைக்காமல் தீச்சட்டி ஏந்தும் நேர்த்திக்கடன் எதற்கு என்றும், தவ நிலையில் உள்ளவர்க்கு செபமாலையும், எதற்கு என்று கேட்டு இறைவனைக் கண்டு தியானித்தவர்க்கு லங்கோடு எதற்கு என்கிறார். லங்கோடு-கோவணம்.

**செல்வம் நிலையாமை**

நாம் தேடிய பொன், பொருள், இந்த உலகம், சேனைப்படைகள் யாவும் நிலையற்றவை. செல்வம், மாடமாளிகை, கூடகோபுரம் உற்றார், உறவினர், உடன் பிறந்தோர் ஆகிய இவை யாவும் அணுவளவும் நாம் சாகும் போது கூட வருவதில்லை என்கிறார் குதம்பை.

**உயிரோடு வருபவை.**

நல்வினை, தீவினை, நாம் செய்த தவம், செய்த கெலைப்பாவம், செய்ததர்மம் முத்தியளிக்கும் கடவுளை போற்றினால் இவையே நம் கூட வருபவை ஆகும்.

**ஆசையை ஒழித்தல்.**

பொருள்மீதுள்ள வாஞ்சை ஒளித்து ஆசையை அறுத்தவர்க்கு ஆனந்தம் உண்டு என்றும், இன்பம் எய்திட இச்சை பெறாதவர்க்கு துன்பமே உண்டாகும் என்கிறார்.

**தவத்தின் சிறப்பு:**

பிற உயிர்களைக் கொல்லாத விரதம், குளிரைத்தாங்குதல், பிறர் பசியை நீக்குதல், காமத்தை வென்று ஒதுக்கியவர்க்கும், யோகத்தை விரும்பிச் செய்தவர்க்கும், பொய்க் கூறுவதை வெறுத்து ஒதுக்கியவர், யான், எனது, என்னும் பற்றுகளை விட்டவர்கள், மெய் ஞானிகளுக்கும்

"ஐம்புலன் வென்றே அனைத்தும் துறந்தோர்கள்
சம்புவைக் காண்பாரடி குதம்பாய்
சம்புவைக் காண்பாரடி"

ஐம்புலன்மளையும் வென்று எப்பொருள் மீதும் உள்ள பற்றைத் துறந்தவர்களும் சிவனைக் காண்பார்கள் பற்று உற்றால் துன்பமும், பற்று நீங்கினால் இன்பமும் கிடைக்கும் என்கிறார்.

**அறிவின் பெருமைகள்**

இறைவனைச் சேர வேண்டுமானால்சத் பொருளைக் கண்டாலும், உலகை உண்டாக்கிய கடவுள் ஒருவன் உண்டென்று ஆராய்ந் அறிந்தாலும் முக்குற்றங்களை நீக்கியவர்களும், அறிவு என்பது இதுதான் அன்று உண்மையான அறிவைச் காணுதலுமே அறிவின் பெருமையாகும். திருவள்ளுவரும் அறிவுடைமை என்ற ஓர் அதிகாரமே வைத்துள்ளார்.

**சமய நிலையும், சாதிபேத இழிவும்:**

புத்தியே தெய்வமாகவும், உருவ படிவங்களை தெய்வம் என்றாலும், ஒரு பரம்பொருள். இல்லை என்றாலும், சூரியன், மனம், வேதங்கள், குரங்கு, கழுகு போன்றவற்றை வேண்டுவதாலும் தேவன் ஒருவனே என்றும் உரை வேண்டுவதாலும், பார்ப்பனர் மேல்சாதி, பறையர் கீழ்சாதி

என்று பேசுவது தவறு என்று ஆண்,பெண் என்ற இருசாதி தவிர வேறு இல்லை என்றும், இறைவன் உலகைப் படைத்த காலத்தில் சாதிகள் இல்லை என்றும் சாதி, சமய என்று ஒன்று இல்லை என்றாலும் கூறுகிறார்; யந்திர மந்திர நிலை, வாதநிலையையும், மருத்துவத்தைப் பற்றியும், கற்ப காலம் பற்றியும் கற்பாந்த காலம் என்பது - நீண்ட ஒரு கணிதகாலம் ஆகும். கோயில் தலங்களையும், தெய்வ நிலைப் பற்றியும் பல கோணங்களில் கூறியுள்ளார்.

**அறியாமை நீக்கல்**

தீண்டத்தகாதவர் என்று கூறுபவரும், தீட்டு என்று சொல்பவரும், சாப்பறை ஒலிப்பதும். அவரவர் வினை அவரவர்க்கே. என்று அறியாதவர்களும், நல்வினை, தீவினை என்பதுவேதச்சடங்குகள் பார்ப்போரும், பசு தானம் வேத ஆராய்ச்சி, வேள்வி செய்தல், யாகம், சகுனம்பார்த்தல், வஞ்சனைசெய்தல், மாய வித்தைகள்செய்தல், மந்திரதந்திரம்செய்தல், சோதிடர்களின்பொய்யானவார்த்தை பேயோட்டுதல், ஆகமங்களைஓதுதல், காய, கல்ப மருந்து இவையாவும் அறியாமையாகும். இறைவனைக் கருத்தில் வைத்தவர்க்கும், உணர்வுக்குரிய இடங்களில் மனம் பதித்தவர்க்கும் தவத்தை மேற்கொண்டவர்க்கும், வெட்ட வெளியில் அசையும் ஒலியையும், ஒளியையும்கானும் மூத்தவர்க்கும் அறிவுடன் செயல்படுபவர்க்கும் ஞானம் தேவையில்லை என்கிறார் குதம்பை.

**துணை நூற்பட்டியல்**


1. அறிவொளி. அ (உ.ஆ), சித்தர் பாடல்கள். வர்த்தமானன் பதிப்பகவெளியீடு, சென்னை.
2. பரசுராமன். பி.என்.,சித்தர்கள் சரித்திரம், ஜெனரல் பப்ளிஷர்ஸ், சென்னை.
3. பாலசுப்பிரமணியம்.சிற்பி,சேதுபதி.சொ. (தொ.ஆ) -தமிழ் இலக்கிய வரலாறு, மணமலர்ப் பதிப்பகம், சென்னை.1998
4. பேராசிரியர் புலவர் மாணிக்கம் அ. - பன்னிருதிருமுறைகள், திருமந்திரம், வர்த்தமானன் பதிப்பகவெளியீடு, சென்னை.
5. வரதராசனார் .மு, திருக்குறள். பாரிநிலையம், சென்னை.2014